

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (12.3.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் 6 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.80 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நீரூற்றுகளுடன் கூடிய புதிய பூங்காவை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) சிறப்பு அலுவலர் ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., தலைமை நிர்வாக அலுவலர் (ம) மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பார்த்தீபன், கண்காணிப்பு பொறியாளர் (பொ) பாலமுருகன், செயற்பொறியாளர் ராஜன்பாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - ராஜீவ் காந்தி சிறப்புரை!

# ஆலந்தூர் வடக்கு பகுதி சார்பில் முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

## பா.குணாளன் தலைமை! என்.சந்திரன் - கோல்டு பிரகாஷ் முன்னிலை!

சென்னை மார்ச் 13

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் வடக்கு பகுதி சார்பில் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (13-3-2024 - புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் தர்மராஜா கோவில் தெரு, ஆலந்தூரில் நடைபெறுகிறது.

இம் மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு ஆலந்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் பா.குணாளன் தலைமை இருக்கிறார்.

ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் என் சந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், வே. டில்லி பாபு கோ. லிஸ்வரன், ஐ. அழகேசன், ஜெயா செல்வம், எம். சையத் தாஹிர், கே. பாபு குமார், ரா கீர்த்தி ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.பி.முரளி கிருஷ்ணன், எம்.ஆர்.ஸ்ரீனிவாசன், ஜே.செல்வேந்தி ரன், டி.ரவி, மா.கோ.கருணாநிதி, பா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தா.மோ. அன்பரசன், மாநில மாணவரணி தலைவர் ரா.ராஜீவ் காந்தி, பரிதி இளம் சுருதி ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை பங்கேற்பு!

# தியாகராயர்நகர் 131-வது வட்டக் கழகக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, மார்ச் 13 -

தியாகராயர்நகர் 131-வது வட்டக் கழகக் கூட்டம் இன்று நடைபெறுவது குறித்து வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 131வது வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (13-03-2024 புதன்கிழமை) மாலை 6:00 மணிக்கு கிளைக்கழக அலுவலகம் கலைஞர் பொதுநல மன்றத்தில் அவைத் தலைவர் வை.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தியாகராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர்நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., ஆகியோர் கலந்துகொண்டு மற்றும் புதிதாக நியமனம் செய்யப்பட்ட 131வது வட்ட கழக பாக ஒருங்கிணைப்பாளர் பகுதி அவை தலைவர் மு.மணிவண்ணன் மற்றும் பகுதி பொருளாளர் ஜி.மோகன்ராஜ் ஆகியோர்களை அறிமுகம் செய்கிறார்கள்.

அதுபோது கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட இருப்பதால் வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.




